[20th April 1959

*Secondary schools*

* 2 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have issued orders for the bifurcation of classes and fixing strength of students in each class for secondary schools; and

(*b*) is so, the details of the same?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) According to rule 18 of the Madras Educational Rules, the strength in each form or class or a section of a form or class should not exceed 40 and, if the strength exceeds 40, the class or form or section of a class or form, as the case may be, should be bifurcated. The rule also permits, as a temporary measure, the admission of 45 pupils in a section if each pupil can be ensured a floor space of 10 square feet.

Sri N. K. PALANISAMI : அவ்வாறு மாணவர்களுக்கு பத்து சதுர அடி இருப்பதன் காரணமாக போதுமான இடம் அந்தக் கிளாசுக்கு இருக்கிறதா? அதனால் அதிகப்படியான பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு தடை படுகிறதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது 40 மாணவர்களுக்கு ஒரு வகுப்பு என்று அமைத்து அதில் உட்கார்ந்து கொண்டு நல்ல சுகாதார அமைப்பு பிரகாரம் அவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சுகாதார அமைப்பில் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவு போதுமானது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் இது அதிகமாக இருக்கிறது என்று கருதினால் அதைப் பற்றி எஜுகேஷன் கமிட்டிக்கும் எழுதி அனுப்பலாம்.

*Cases filed under the Madras Cultivating Tenants Protection Act, 1955.*

* 3 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cases that arose under the Madras Cultivating Tenants Protection Act, 1955, districtwar in 1957 and 1958 so far; and

(*b*) the number of cases decided and the number pending?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The particulars are furnished in the form of a statement [a] which is placed on the table of the House.

---

[a] Printed as Appendix I on page 45 infra

20th April 1959]

Sri K. SATTANATHA KARAYALAR : சில ஜில்லாக்களில் சுமார் 40 சதமானம் உள்ள வழக்குகள் முடிவாகாமல் தீர்ப்பு அளிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் என்ன ? இந்தக் காலதாமதத்தைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : சில கேஸ்கள் சிக்கலாக இருக்கும். அவைகளைப் பைசல் செய்வதில் காலதாமதம் ஏற்படலாம்.

*Industries in the public sector*

* 4 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the industries in the public sector that are at a stand-still for want of industrial capital goods?

The Hon. Sri R. VENKATARAMAN : (1) Glass Apparatus Factory, Guindy.

(2) Service Centre for the manufacture of Surgical Instruments, Guindy.

(3) Service Centre for the manufacture of Electrical Goods, Guindy.

(4) Factory for the manufacture of essential Handloom Parts, Salem.

(5) Wool Processing Centre, Vinnamangalam.

(6) Central Workshop for the manufacture of iron parts for assembling Ambar Charka sets.

Sri K. SATTANATHA KARAYALAR : முக்கியமான சாமான்கள் தருவிப்பதில் வெளிநாட்டுச் செலாவணி இல்லாதது காரணமா அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்படாமல் இருந்ததன் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது இவைகளுக்கு ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறோம்.

The Hon. Sri R. VENKATARAMAN : சில தொழிற்சாலைகளுக்கு போதிய யந்திரங்கள் வெளி நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிவிட்டது. அவைகள் இன்னும் வந்து சேரவில்லை. மூன்று தொழிற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரங்களுக்கு வேண்டிய அந்நிய செலாவணி இல்லாததன் காரணத்தால் அது தடைப்பட்டு நிற்கிறது. அந்நியச் செலாவணி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எவ்வளவு இருக்கும் என்று எதிர்பார்த்ததோ அந்த அளவுக்கு இல்லாமல் இருக்கிறது. அதைவிடக் குறைவாக இருக்கிறது என்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும்.

Sri P. S. CHINNADURAI : அம்பர் சர்க்கா உற்பத்தி செய்வதற்கு உரிய பண்டங்களுக்குக்கூட வெளி நாட்டை எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறதா ? நம்முடைய நாட்டினுடைய சாதனங்களைக் கொண்டு அவைகளைத் தயாரிக்க முடியும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?